www.tamilarangam.net

# தியாகிகள் தினம்



மக்களுக்காகப் போராடி இலட்சியப் பாதையில் மரணித்த எமது ஆற்றல்மிகு தோழர்களுக்கும் சகஇயக்கப் போராளிகளுக்கும் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்ட பொது மக்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் தினமே தியாகிகள் தினம்.

மானுடவர்க்கத்தின் மனிதப் பண்புகளுடன், அமைதி, சமாதானம், ஜனநாயகம் நிறைந்த, சமதர்ம வாழ்வை தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க போராடி மரணித்த, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர்.க.பத்மநாபாவும், பன்னிரு தோழர்களும் சென்னையில் வைத்து 1990 யூன்19 இல் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தினம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் தியாகிகள் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு உலகெங்கும் வாழும் தமிழ்பேசும் மக்களால் நினைவுகூரப்பட்டு வருகிறது.

தமிழ்பேசும் மக்கள் இடைவெளியற்ற இன்னல்களை தமிழ் பயங்கரவாதிகளூடாக அனுபவித்து, இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைகளாக.........

சமாதானம், அமைதி என்பதெல்லாம் வெறும் கானல் நீராகிப் போய்விட்ட துர்ப்பாக்கிய நிலையில் கொலை, கொள்ளை, பட்டினிச் சாவு, வறுமை எனும் வலுக்கட்டாயமான வாழ்க்கை முறைக்குள் திணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குருட்டுத்துப்பாக்கி ஏந்தும் வரட்டுச்சித்தாந்தம் கொண்ட முரட்டுவாதிகளால் சரடுகள் நிறைந்த கரடுமுரடான இடிபாடுகளுக்கு மத்தியில் இருட்டு வாழ்க்கையில், செக்காடும் மாடுகள் போல் செம்மறி ஆடுகள் போல் செல்லாமல் பொற்காலம் காண்பதற்கு.......

விலங்குகளினால் விலங்கிடப்பட்டு நிலங்களற்று, நிறங்களற்று நிலையிழந்து, பலமிழந்து மலங்க விழித்து கலங்கிநிற்கும் மக்களுகக்கு கலங்கரை விளக்காய்.....

அக்கினிக் குஞ்சுகளான தியாகிகளின் தியாகங்கள், இலட்சியப்பாதையில் பதித்த கால்தடங்களாய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**
**சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம். 19.06.95**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்